9th August 1963]

So the demand for handloom goods is going down. It is a matter of taste and preference. Some people still continue to ask for them. The cost varies and so, many people are changing over to cheaper variety of goods made by the Mills.

திரு. கே. ஏ. மதியழகன் : அமெரிக்க நாட்டுப் பெண்களுக்குத் 9–30 a.m.
தமிழ் நாட்டுக் கைத்தறித் துணியின்மீது மோகம் ஏற்பட்டிருக்கிறதென்பது உண்மைதானா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எனக்கு அந்த நாட்டுப் பெண்களைத் தெரியாது. (சிரிப்பு).

House Rent allowance

* 78 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that the House Rent Allowance is not given to the Government servants residing in non-taluk headquarters; and

(*b*) if so, whether there is any proposal to extend the House Rent Allowance to them?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) House Rent Allowance is not generally given to the Government servants residing in non-taluk headquarters. However, House Rent Allowance is being paid to the Government Servants stationed at certain non-taluk headquarters like Chinnalapatti, T. Kallupatti and Annamalainagar, in view of the special nature of these places.

(*b*) There is no proposal to extend the scheme of House Rent Allowance to non-taluk headquarters.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கும் ஏற்பாடு எந்த ஆண்டிலிருந்து இருந்து வருகிறது என்று நான் அறிய விரும்புகிறேன். இந்தப் பாகுபாடு எதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்த ஆண்டிலிருந்து ஏற்பட்டது என்ற தகவல் என்னிடம் இல்லை. வாழ்க்கைச் செலவு எங்கெங்கு அதிகமாக இருக்கிறதோ, வீட்டு வாடகை எங்கெங்கு அதிகமாக இருக்கிறதோ, அதை அடிப்படையாக வைத்துக் கொண்டு, அந்தந்த ஸ்தலங்களில் வீட்டு வாடகைப் படி கொடுப்பது என்பது முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

Platform dwellers

* 79 *Q.*—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have made a survey of platform dwellers in the Madras City;

(*b*) if so, the latest figure according to the survey; and

(c) whether the Government have any proposal for their rehabilitation?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) and (b) The State Housing Board, has conducted a survey of all the slum dwellers in the City, including platform dwellers, during the period from November 1961 to June 1962. According to this survey, there are about 3,600 families of platform dwellers in the City.

(c) Three projects have been formulated for the rehabilitation of pavement dwellers, out of whom 405 families (from the Ophthalmic Hospital area and Georgetown) have been already shifted and rehabilitated elsewhere, at a cost of about Rs. 5,20,800.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த முயற்சியில் இன்னும் சற்று அதிக விரைவு காட்டி, துறைமுகப் பகுதியில் இருக்கிற நடைபாதை வாசிகளுக்கு உயரமான கட்டடங்களைக் கட்டி, அங்கே அவர்களைக் குடியமர்த்துவதற்கு ஏதாவது வழிவகை செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் சொல்கிற யோசனைகளில் இரண்டு கஷ்டங்கள் இருக்கின்றன. அதே பகுதியில் இடம் கிடைக்கவில்லை என்பது ஒரு கஷ்டம். இன்னொரு கஷ்டம்—அந்தப் பகுதியிலேயே வேண்டுமென்று சொன்னால், நிலத்தின் விலை வெகு அதிகமாக இருக்கிறது. அவ்வளவு விலை கொடுத்து நிலம் வாங்கி அவர்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய வாடகையில் கொடுப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இருந்தாலும், அவர்களை வேறு இடங்களில் புனர் நிர்மாணம் செய்ய வேண்டுமென்ற யோசனைப்படி இப்பொழுது நாங்கள் திட்டம் வகுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. இராம. அரங்கண்ணல் : சென்னை மாநகரத்தில் குடிசை வாழ்ப் பகுதிகளும் நடைபாதைப் பகுதிகளும் ஏராளமாக இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அங்கு வசிப்பவர்களுக்கு இடம் தேடிக் கொடுப்பதில் இருக்கும் சிரமத்தை எடுத்துச் சொன்னார்கள். இப்பொழுது அடையார், ஊரூர், கோடம்பாக்கம், புதூர் ஆகிய இடங்களில் இருக்கும் மனைக்கட்டுகளையெல்லாம் ஏலம் போட்டு அதிக விலைக்கு யார் எடுக்கிறார்களோ அவர்களுக்கு அவை கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த முறையை மாற்றி, பணத்தைச் சம்பாதிப்பதை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளாமல், அவர்களுக்கும் வசதி செய்து கொடுக்கும் பொருட்டு, அந்த இடங்களைப் பயன்படுத்த அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டதற்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன். இந்தத் தவறான கருத்து வெளியிலும் பரவியிருக்கிறது. அதுபோல் கனம் அங்கத்தினரிடத்திலும் பரவியிருக்கிறது என்று தெரிகிறது. நாம் போடுகிற காம்பசிட் ஸ்கீம்களில் 10 சதவிகிதத்திற்கு அதிகமாக இல்லாமல், எந்த எந்த இடங்கள் வியா

9th August 1963]

பாரம், வர்த்தகம் போன்ற வேலைகளுக்கு அவசியமாக இருக்கும் அல்லது உபயோகமாக இருக்கும் என்று பார்த்து, அந்த இடங்களை ஏலம் போடுகிறோம். அந்த இடங்களை ஏலம் போட்டு, அதில் வரும் அதிகப்படியான பணத்தை மற்றவர்களுக்குக் குறைவான விலை யில் நிலம் கொடுப்பதற்குப் பயன்படுத்துகிறோம். அம்மாதிரி ஏலம் போடாவிட்டால், நாம் ஸ்லம் ட்வெல்லர்ஸ்களுக்கோ, லோயர் மிடில் க்ளாஸினர்களுக்கோ நிலத்தின் விலையைக் குறைத்துக் கொடுக்கமுடியாது. ஆகையால், இந்தத் திட்டத்தை மத்திய சர்க்காரே ஏற்கும்படியாக இந்த ராஜ்ய சர்க்கார்தான் கேட்டுக் கொண்டது. அப்படி ஏற்றுக்கொண்டதன் பலனாக, ஓரளவு ஸ்லம் க்ளியரன்ஸ் ஸ்கீமைச் சற்றுக் குறைவான செலவில் செய்ய முடிகிறது. ஊரூர், கோடம்பாக்கம், புதூர், மேற்குச் சென்னை, வட சென்னை போன்ற புதுத் திட்டங்கள் எல்லாவற்றிலும், அங்கிருக் கும் ஜனத்தொகையிலே 40 சத விகிதத்திற்குக் குறைவு இல்லா மல், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும், ஏழைகளாக இருப் பவர்களுக்கும் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும் நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திரு. மு. கருணாநிதி : வேறு இடங்களில் நடைபாதை வாசி களைக் குடியேற்றுவதற்கு முயற்சிகள் நடப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், அந்த நடைபாதை வாசி கள், தாங்கள் பணியாற்றுகிற அல்லது கூலி வேலை செய்கிற இடங் களைவிட்டு மற்ற இடங்களுக்குச் செல்ல வசதி இல்லை என்று மறுக்கும் காரணத்தால் அவர்கள் வேலை பார்க்கும் இடங்களுக்கு அருகாமையிலேயே அவர்களுக்கு வசதியான கட்டடங்களை அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த இடங்களில் கட்ட டம் அமைத்துத் தருவது இயலாது. ஒரு முறை அவர்கள் வசதி யுள்ள மற்ற இடங்களில் வசிக்க ஆரம்பித்துவிட்டால், பிறகு அந்த இடத்தில்தான் இருக்கவேண்டுமென்று நினைக்கிறார்கள். எந்தவிதமான சுகாதார வசதியும் இல்லாமல் நடை பாதையில் எத்தனையோ கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தோமே என்று சந்தோ ஷப்படுகிறார்கள். அவர்களை முதலில் நடைபாதையை விட்டு நல்ல பாதைக்குப் போகும்படிச் செய்வதுதான் கஷ்டமாக இருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : 'எல்லோரும் இந் நாட்டு மன்னர் கள்' என்பது நம்முடைய லட்சியம். இப்படி நடைபாதை மன்னர் கள் இருப்பது ஒரு தேசீய அவமானம் என்று கருதி, அதை நீக்கு வதற்கு அவசர நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த அவமானம் நாம் செய்யவில்லை. யாரோ ஒருவர் நமக்குச் சொத்தாகச் சேர்த்து வைத்துவிட்டுப் போனார்கள். நாம் அதை நீக்குவதற்கு முயற்சி செய்திருக்கிறோம்.

திரு. ஜே. மாதா கவுடர் : நடைபாதை வாசிகளை அப்புறப் படுத்தும்போது, அந்த இடத்தில் புதிதாக நடைபாதை வாசிகள் தோன்றிவிடக் கூடாது, அந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொள்ளக் கூடாது என்பதற்காக, அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் அவர்கள் ஸ்டான்லி ஆஸ்பத்திரியின் பக்கம் போய்ப் பார்த்தால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியும். அங்கு நடைபாதை அகலமாக இருப்பதைக் குறைத்து, ரோடை அகலமாகச் செய்துவிட்டோம். ஆகவே, அங்கே யாரும் வசிக்க முடியாது.

திரு. ஆர். ரங்கசாமி : ஒரு கனம் அங்கத்தினர் அவர்கள், 'ஆங்காங்கு நடைபாதைகளில் கட்டடம் கட்டிக்கொடுத்தால் என்ன ?' என்று கேட்டார்கள். அதனால் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுமே . .

கனம் சபாநாயகர் : 'நடைபாதைகளில் கட்டடம் கட்டவேண்டும்' என்று கனம் அங்கத்தினர் சொல்லவில்லை.

திரு. ஆர். ரங்கசாமி : 'இருக்கும் இடத்திலே' என்று சொன்னார். இருக்கும் இடத்தில் வீடு கட்டிக் கொடுத்தால் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கும் என்பதை அரசாங்கம் அறியுமா ?

MR. SPEAKER : No answer is needed.

திரு. டி. கார்ச்சா கவுடர் : நடைபாதை வாசிகளை மாற்று இடங்களில் குடியமர்த்துவது சென்னை நகரத்தில் மட்டும் அமுல் படுத்தப்படுகிறதா ? கோயம்புத்தூர், மதுரை போன்ற முக்கியமான நகரங்களிலும் நடைபாதை வாசிகள் இருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் உணருமா ? அவர்களைக் குடியமர்த்துவதற்கும் ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த மாதிரி நடைபாதை வாசிகள் இப்பொழுது மற்ற நகரங்களில் இருப்பதாகச் சர்க்காருக்குத் தகவல் இல்லை. அங்கெல்லாம் 'ஸ்லம்ஸ்' இருக்கின்றன.

SRI K. S. G. HAJA SHERIFF : Are the Government aware that those platform dwellers who have already been rehabilitated, have come back again to their original places, letting those rehabilitated places to rent and if so, what steps are being taken to prevent the recurrence of these things?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government have received some information that some of these people who have been rehabilitated in other areas have exploited their belongings for getting some more income and rented them out, and have come

away to live in slums. But I am quite sure, that they have not come back to the same place which the hon. Member has in mind. These are things which we must put up with and try to solve.

ஆசிரியர்களுக்குப் பென்ஷன் வசதிகள்

***80 கேள்வி.—திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

1955-ம் ஆண்டில் வேலையிலிருந்து ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்குக்கூட பென்ஷன் வசதிகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன என்பது உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Teachers in Government service have all along been eligible for pension. As regards teachers in non-Government service, pension facilities have been extended to all trained teachers who retired on or after 1st April 1955 or who having attained the age of superannuation prior to the 1st April 1955, were actually in service in the same or any other school on or after the 1st April 1955.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—Asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—POINT OF ORDER *re.* THE REPORTED RESIGNATION OF THE CHIEF MINISTER.

திரு. கரு. சீமைச்சாமி : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், ஸார். முதல் அமைச்சர் கனம் திரு. காமராஜ் அவர்களைப்பற்றி இப்பொழுது பத்திரிகைகளில் பரபரப்பான செய்திகள் . . .

கனம் சபாநாயகர் : பத்திரிகைகளை எல்லோரும் படித்திருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் ஒழுங்குப் பிரச்னை என்ன என்பதைச் சொல்லலாம்.

திரு. கரு. சீமைச்சாமி : "முதல் அமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் ராஜினாமா செய்யப் போகிறார்கள், நிச்சயமாகச் செய்வார்கள்" என்று பத்திரிகையில் செய்தி வருகிறது.

கனம் சபாநாயகர் : ஒழுங்குப் பிரச்னை என்ன ?

திரு. கரு. சீமைச்சாமி : அவர்கள் ராஜினாமா செய்வார்களா, செய்யமாட்டார்களா என்பது மக்கள் மத்தியில் பெரிய குழப்பமாக இருக்கிறது. நமக்கே தெரியவில்லை. 1954-இல் . . . .

MR. SPEAKER : It is not a point of order.

III.—CALLING ATTENTION TO THE POOR RESPONSE TO TAMIL MEDIUM COURSES IN THE ARTS COLLEGES.

திரு. இராம. அரங்கண்ணல் : கலைக் கல்லூரிகளில் தமிழ் மொழியில் பயில்வதற்குப் போதுமான மாணவர்கள் முன் வராத காரணத்தினால் இது குறித்து அரசு எடுத்துக் கொண்டுள்ள நட-